வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்— நாராயணசாமி

தேதி 13.9.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மணிப்பூரில் 7 ஆயிரத்து 300 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பிலான மேம்பாட்டு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் 36 உயிர் காக்கும் மருந்துகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டின் புதிய தேசிய கல்விக் கொள்கை தற்சார்பை வலியுறுத்துவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

ஐந்தாவது உலகளாவிய கடலோர காவல் படை உச்சி மாநாட்டை சென்னையில் நடத்த இந்தியாவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மோடி 1 (18)

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று முதல், வரும் 15-ஆம் தேதி வரை, மிசோரம், மணிப்பூர், அசாம், மேற்குவங்கம், பீகார் ஆகிய மாநிலங்களுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். பிரதமரின் இன்றைய மணிப்பூர் மாநில பயணம் குறித்த கூடுதல் தகவல்கள்……

வாய்ஸ்

மோடி 2 (15)

**வாய்ஸ்**

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மணிப்பூரில் உள்ள சூரசந்த்பூரில் 7 ஆயிரத்து 300 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பிலான பல மேம்பாட்டு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். மணிப்பூர் நகர்புற சாலைகள், வடிகால் மற்றும் சொத்து மேலாண்மை மேம்பாட்டு திட்டம், 5 தேசிய நெடுஞ்சாலை திட்டங்கள், மணிப்பூர் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டு திட்டம், பணிபுரியும் பெண்களுக்கான 9 விடுதிகள் உள்ளிட்ட 19 திட்டங்களும் இதில் அடங்கும்.

சூரசந்த்பூர் மாவட்டத்தில் உள்ள அமைதி மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர், மணிப்பூர் மாநிலம் நம்பிக்கை மற்றும் வளர்ச்சியின் பூமி என்றும், ஆனால், இன வன்முறை இம்மாநிலத்தை வாட்டி வதைப்பதாகவும் வேதனை தெரிவித்தார். மேலும், அமைதியில்லாமல் வளர்ச்சி என்பது ஏற்பட முடியாது என்று குறிப்பிட்ட அவர், இளைய தலைமுறையினர் வகுப்புவாத வெறுப்பு, பதற்றம் மற்றும் மோதல்களை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மாநிலத்தின் நலன் மற்றும் வளர்ச்சி குறித்து சிந்திக்குமாறும் வலியுறுத்தினார்.

மோடி 3 (13)

இந்தியாவின் முன்னேற்றத்திற்கு முக்கிய தூணாக மணிப்பூர் மாநிலம் திகழ்வதாகவும், மத்திய அரசு ரயில் மற்றும் சாலை வசதிகளை இம்மாநிலத்தில் மேம்படுத்தி வருவதாகவும் கூறினார். கடந்த சில ஆண்டுகளில் தேசிய நெடுஞ்சாலைகளுக்கு மத்திய அரசு 3 ஆயிரத்து 700

கோடி ரூபாய் ஒதுக்கியதையும் அவர் சுட்டிக்காட்டினார். 80 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நெடுஞ்சாலை மேம்பாட்டு பணிகள் நடந்து வருவதாகவும், ஜிரிபாம் முதல் இம்பால் வரையிலான ரயில் திட்டத்திற்கு 22 ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். இம்பால் விமான நிலைய மேம்பாட்டிற்கும், ஹெலிகாப்டர் சேவைக்கும் 400 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பிரதமர் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக் காலத்தில் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப் பட்டுள்ளதாக கூறினார்.

*மோடி மிசோராம்* (19)

முன்னதாக, இன்று காலை மிசோரம் மாநிலத்தின் முதலாவது ரயில் வழி தடத்தை பிரதமர் தொடங்கி வைத்து, வேறு பல முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் அனைத்து தரப்பு மக்களும் பயனடைவார்கள் என்று தெரிவித்தார். குறிப்பாக, 36 உயிர் காக்கும் மருந்துகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு இருப்பதாக கூறினார். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக வட கிழக்கு மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது நாட்டின் வளர்ச்சியில் அம்மாநிலங்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் குறிப்பிட்ட பிரதமர், இந்த நாள் மிசோராம் மக்களுக்கு வரலாற்று சிறப்பு மிக்க நாள் என்றார். காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் போது சாய்ரங்-கிலிருந்து டெல்லி, கௌகாத்தி, மற்றும் கொல்கத்தாவிற்கான ரயில் சேவைகளை பிரதமர் தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் 77 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே திட்டங்கள் வடகிழக்கு மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார். பிரதமரால் திறந்து வைக்கப்பட்ட பைராபி-சாய்ரங் ரயில் பாதையில் 48 சுரங்கங்களும்,

153 பாலங்களும் உள்ளன என்பதும், இத்திட்ட பணிகள் நிறைவேற 11 ஆண்டுகள் ஆனதும் குறிப்பிடத் தக்கது.

*தர்மேந்திர பிரதான்* (8)

நாட்டின் புதிய தேசிய கல்விக் கொள்கை தற்சார்பை வலியுறுத்துவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார். ஒடிசா மாநிலம் சம்பல்பூர் பல்கலைக் கழகத்தின் 35 ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் கல்வித் துறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும், புதிய கல்வி கொள்கையில் தாய்மொழி கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதாகவும் கூறினார். இதன் மூலம், நுட்பமான கற்றல் திறன் அதிகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

*எல் முருகன்* (9)

பஞ்சாப் மாநிலத்தில் சமீபத்தில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் இன்று ஆய்வு செய்தார். சட்லஜ் ஆற்றங்கரையோர கிராமங்களில் கள ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அம்மாநிலத்திற்கு மத்திய அரசு ஏற்கனவே ஆயிரத்து 600 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கியுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுடன் மத்திய அரசு துணை நிற்கும் என்றும் திரு முருகன் நம்பிக்கை தெரிவித்தார்.

*கட□ார காவல் படை* (5)

ஐந்தாவது உலகளாவிய கடலோர காவல் படை உச்சி மாநாட்டை சென்னையில் நடத்த இந்தியாவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2027 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள இந்த உச்சி மாநாடு கடலோர மற்றும்

கடல் சார் பாதுகாப்பில் நாட்டின் தலைமைத்துவத்தை முன்நிறுத்த வகை செய்வதாக கடலோர காவல் படை தெரிவித்துள்ளது.

**ஜிஎஸ்டி** 1(7)

நாட்டு மக்களுக்கான தீபாவளி பரிசாக இவ்வாண்டு சுதந்திர தினத்தன்று பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்ட அறிவிப்பின்படி, அண்மையில் ஜிஎஸ்டி வாரியம் பல்வேறு துறைகளுக்கு வரி குறைப்பு அறிவித்துள்ளது. அனைத்து பிரிவு மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் வகையிலான இந்த, அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், சாதாரண மக்களின் அன்றாட உணவு பொருட்களுக்கும் சரக்கு மற்றும் சேவை வரி தற்போது குறைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு......

**(வாய்ஸ்)**

**ஜிஎஸ்டி** 2 (15)

**(வாய்ஸ்)**

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய பொருட்களான காய்கறிகள், பழங்கள், நட்ஸ் மற்றும் பழச்சாறு உள்ளிட்டவை மீதான சரக்கு மற்றும் சேவை வரி 12 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. நம்கின், பூஜ்யா, மிக்சர் உள்ளிட்ட சிற்றுண்டிகளுக்கும், 12 சதவிகித்தில் இருந்து 5 சதவிகிதமாக ஜிஎஸ்டி குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சர்க்கரையை மூலப்பொருளாக கொண்ட மிட்டாய்கள், ஜெல்லி போன்றவை மீதான சரக்கு மற்றும் சேவை வரி 18 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. வரவிருக்கும் பண்டிகை காலத்தை முன்னிட்டு அரசாங்கம் மக்களுக்கு இத்தகைய சலுகைகளை அளித்திருப்பது பெரும் நிவாரணமாகவும், மகிழ்ச்சியளிப்பதாகவும் உள்ளதாக வணிகர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், இந்த வரிக்குறைப்பு மூலம் சில்லறை விலைகள் குறையும். மற்றும், அத்தியாவசிய பொருட்களின் நுகர்வை ஊக்குவித்து, வேலை

வாய்ப்புகளையும் அதிகரிக்க செய்யும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்த புதிய வரி விகிதங்கள் இம்மாதம் 22 ஆம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளது குறிப்பிடத் தக்கது.

நி□நடுக்கம் (5)

ரஷ்யாவின் கம்சட்கா பிராந்தியத்தில் கிழக்கு கடற்கரைக்கு அருகில் இன்று காலை 7.4 ரிக்டர் அளவிலான நில நடுக்கம் ஏற்பட்டது. அமெரிக்க புவியியல் ஆய்வின் படி, இந்த பிராந்தியதில் இருந்து 111 கிலோ மீட்டர் கிழக்கே 39.5 கிலோ மீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு, பின்னர் அது திரும்ப பெறப்பட்டது.

நேபாளம் (5)

நேபாள இடைக்கால அரசின் பிரதமராக அந்நாட்டின் முன்னாள் தலைமை நீதிபதி திருமதி சுசீலா கார்கி பதவி ஏற்றதை அடுத்து, அங்கு இயல்பு நிலை திரும்பி வருகிறது. காத்மண்டு உட்பட பல்வேறு பகுதிகளில ஊரடங்கு உத்தரவு விலக்கி கொள்ளப்பட்டுள்ளது. எனினும், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

வானிை□ (5)

வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிசா கடற்கரைக்கு அப்பால் வங்க கடலில் நேற்று, காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளதால், அடுத்த 2 நாட்களுக்கு தமிழகம் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் ஆகிய பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய கன மழை பெய்யும் என்று

தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, நேற்றிரவு புதுச்சேரியில் 8 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

விளையாட்டு (4)

உலக தடகள சாம்பியன் போட்டிகள் ஜப்பானில் இன்று தொடங்கின. டோக்கியோவில் வரும் 18 ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் நீரஜ் சோப்ரா தலைமையிலான 19 பேர் கொண்ட அணி பங்கேற்றுள்ளது.